### எதிர்க்கட்சித் தலைவர்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு குறிவைக்கும் போக்கு!

# நேஷனல் ஹெரால்ட் வழக்கில் மீண்டும் அம்பலம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**புதுடெல்லி, டிச. 17-**

**ஒன்றிய பா.ஜ.க. அரசு எதிர்க் கட்சித் தலைவர்களை குறி வைத்து தவறாகப் பயன்படுத்துவதை நேஷ னல் ஹெரால்டு வழக்கில் நீதித்துறை மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் கண்டனம் தெரிவித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்க ளின் சமூக வலைதளப் பதிவு வரு மாறு:-

நேஷனல் ஹெரால்டு வழக்கில், எதிர்க்கட்சித் தலைவர்களைக் குறி வைத்து ஒன்றிய பா.ஜ.க. அரசு மத் திய அமைப்புகளைத் தவறாகப் பயன் படுத்துவதை நீதித்துறை மீண்டும் ஒருமுறை அம்பலப்படுத்தியுள்ளது.

எந்தவொரு சட்ட அடிப்படையும் இல்லாமல், அரசியல் போட்டியாளர் களை துன்புறுத்துவதற்கும், கேவலப் படுத்துவதற்கும் மட்டுமே இத்தகைய வழக்குகள் தள்ளப்படுகின்றன.

அவர்களின் பக்கம் உண்மை உள்ளதாலும் மற்றும் பயம் இல்லா மல் உள்ளதாலும், நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி மற்றும் எதிர்க் கட்சித் தலைவர், என் சகோதரர் ராகுல் காந்தி பக்கம் நியாயப்படுத்தப் பட்டுள்ளது.

மதச்சார்பின்மை மற்றும் அரசி யலமைப்பு விழுமியங்களில் உறுதி யாக நிற்கும் காந்தி குடும்பத்தை வேட்டையாடுவதில் பா.ஜ.க. தொடர்ந்து முனைந்தாலும், அதை பொறுத்துக்கொள்ள முடியாது.

மீண்டும் மீண்டும், இந்த பழி வாங்கும் அணுகுமுறையானது முதன்மையான புலனாய்வு நிறுவ னங்களின் நம்பகத்தன்மையை களங்கப்படுத்துகிறது மற்றும் அவற்றை வெறும் அரசியல் மிரட்டல் கருவிகளாகச் சுருக்குகின்றது.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.




தொழிலாளர்களுக்கு விரோதமாகவும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நான்கு தொகுப்பு சட்டங்களை ஒன்றிய மோடி அரசு நடைமுறைப்படுத்த உத்தரவிட்டுள்ளது. இதனை கண்டித்து விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி நாடு அளவில் கண்டன போராட்டம் நடத்துகிறது. அதன் தொடர்ச்சியாக 15.12.2025 ராஜரத்தினம் விளையாட்டு அரங்கின் அருகில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன போராட்டத்தை துவக்கி வைத்து விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவரும், கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய தலைவருமான பொன்குமார் கண்டன உரையாற்றினார்.

### தொழிலாளர்களுக்கு விரோதமான 4 தொகுப்புச் சட்டங்கள் நடைமுறை!

# ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து நாடு தழுவிய ஆர்ப்பாட்டம்!

## சென்னையில் பொன்குமார் துவக்கி வைத்தார்!

சென்னை, டிச.17-

தொழிலாளர்களுக்கு விரோதமாகவும், கார்ப்ப ரேட் நிறுவனங்களுக்கு ஆத ரவாகவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள நான்கு தொகுப்பு சட்டங்களை ஒன்றிய மோடி அரசு நடைமுறைப் படுத்த உத்தரவிட்டுள்ளது.

இதனை கண்டித்து விவ சாயிகள் தொழிலாளர்கள் கட்சி நாடு அளவில் கண் டன போராட்டம் நடத்து கிறது. அதன் தொடர்ச்சி யாக 15.12.2025 ராஜரத்தி னம் விளையாட்டு அரங் கின் அருகில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெ ரும் கண்டன போராட் டத்தை துவக்கி வைத்து விவசாயிகள் தொழிலாளர் கள் கட்சி தலைவரும், கட் டுமானத் தொழிலாளர் நல வாரிய தலைவருமான பொன்குமார் கண்டன உரையாற்றினார்..

• தமிழ்நாட்டில் முன்மா திரியாகவும், சிறப்பாகவும் செயல்படக்கூடிய கட்டுமா னத் தொழிலாளர்கள் நல வாரியம் உள்ளிட்ட பல் வேறு வாரியங்களின் எதிர் காலம் கேள்விகுறியாக உள் ளது.

• இந்தச்சட்டம் நடைமு றைக்கு வந்தால் தொழிலா ளர்களின் பாதுகாப்பு கேள் விக்குறியாக்கப்படும்.

• நிரந்தரத் தொழிலாளர் களின் எண்ணிக்கை குறைக் கப்பட்டு, ஒப்பந்தத் தொழி லாளர்கள் மற்றும் தினக்கூலித் தொழிலாளர் கள் எண்ணிக்கை உயர்த்தப் படும்.

• விரும்பிய நேரத்தில் தொழிலாளர்களை முதலா ளிகள் பணி நிக்கம் செய்ய முடியும்.

• ஆண்டு கணக்கில் உலக ளாவிய போரட்டங்களுக் குப் பின்பு 8 மணி நேர வேலை சட்டம் கிடைத் தது. அது தற்போது கேள்வி குறியாக்கப்பட்டுள்ளது.

•எல்லா நிறுவனங்களி லும் பெண்கள் இரவில் பணியாற்றுவதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறி யாக்கப்பட்டுள்ளது.

போன்ற தொழிலாளர்க ளுக்கு விரோதமான இந்த சட்டத்தை திரும்ப பெற கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

15.12.2025திங்கட்கிழமை காலை 10.30 மணி அளவில் நடைபெற்ற இந்த ஆர்ப் பாட்டத்திற்கு இளைஞர ணித் தலைவர் வினோத் பொன்குமார் தலைமை தாங்கினார்.

வட சென்னை வடக்கு மாவட்டத் தலைவர் வி. எம்.நந்தகோபால், அமைப் புசாரா மாவட்டத் தலை வர் எஸ்.ஈசாக், வட சென்னைமேற்குமாவட்டத் தலைவர் எஸ்.சீனிவாசன், சென்னை மேற்கு மாவட் டத் தலைவர் ஆர்.கே.செல் வம், தென் சென்னை தெற்கு மாவட்டத் தலை வர் கே.பஞ்சாட்சரம், வட சென்னை கிழக்கு அமைப்பு சாரா மாவட்டத் தலைவர் பழக்கடை ராஜ், செங்கல் பட்டு மத்திய மாவட்டத் தலைவர் வி.சதாசிவம், வடக்கு மாவட்டத் தலை வர் எஸ்.குமார், திருவள்ளூர் கிழக்கு மாவட்டத் தலை வர் கே.வரதன், மத்திய மாவட்டத் தலைவர் ஆர். கே.முனுசாமி, திருவள்ளூர் தென் கிழக்கு மாவட்டத் தலைவர் எம்.சிவகுமார், தெற்கு மாவட்டச் செயலா ளர் ஆர்.பொன்னுசாமி, மேற்கு மாவட்டத் தலை வர் எம்.ஆர்.மணி ஆகி யோர் முன்னிலை வகித்த னர்.

இந்த கண்டன ஆர்பாட் டத்தில் மாநில செயலாளர் எஸ்.எம்.குமார், தொழிற் சங்க கூட்டமைப்பின் மாநில பொதுச் செயலாளர் கவிஞர் குருநாகலிங்கம், விவசாயிகள் தொழிலாளர் கள் கட்சியின் பொதுச் செயலாளர்கள் என்.சுந்த ராஜ், பொறி.எஸ்.ஜெகதீ சன், துணைத் தலைவர்கள் பீ.கே.மூர்த்தி, என்.லட்சும ணன், எஸ்.இந்துமதி, தலைமை நிலைய செயலா ளர் து.ரஜினிராஜ், இணைச் செயலாளர்கள் ஆர்.பானு கோபன், ஏ.வெற்றி செல் வன், ஏ.ஜெ.நாகராஜ், எஸ். கார்த்திகேயன், மகளிரணிச் செயலாளர் இ.மணி மேகலை, பொருளாளர் பி.வரலட்சுமி, துணைத் தலைவர் எம்.செல்வமலர் உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

### சிவகங்கை மாவட்டம் – சிராவயலில்

# காந்தியடிகள் - தோழர் ஜீவானந்தம் சிலைகள் வடிவமைக்கும் பணி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டார்!

சிவகங்கை, டிச.17-

சிவகங்கை மாவட்டம், சிராவயலில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் அமைக்கப் பட்டு வரும் "காந்தியடிகள் ஜீவா நினைவு அரங்கில்" நிறுவப்படவுள்ள அண் ணல் காந்தியடிகள் தோழர் ஜீவானந்தம் (ஜீவா) சிலை கள் வடிவமைக்கும் பணி யினை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் நேரில் பார் வையிட்டார்.



சுதந்திரப் போராட்ட காலத்தில் தேசப்பிதா காந் தியடிகள் மற்றும் பொதுவு டைமை வீரர் ப.ஜீவானந் தம் (ஜீவா) ஆகியோர் சந்தித்துப் பேசிய வரலாற் றுச் நிகழ்வை போற்றும் வகையில், சிவகங்கை மாவட்டம், சிராவயல் கிரா மத்தில் நினைவு அரங்கம் அமைக்க தமிழ்நாடு அரசு ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளி யிட்டது.

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில், காந் தியடிகள் மற்றும் ஜீவா ஆகி யோர் சிவகங்கை மாவட் டம், சிராவயல் கிராமத்தில் சந்தித்துப் பேசினர்.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்திப்பின் நினைவாக அவ்விடத்தில் மணிமண்ட பம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

முதலமைச்சர் அவர்கள் கடந்த 06.08.2023 அன்று திருப்பூரில் நடைபெற்ற இந் திய கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது மாநில மாநாட்டில் காணொலிக்காட்சி வாயிலாகக் கலந்து கொண்டு மேற்கண்ட அறி விப்பை வெளியிட்டார்கள்.

முதலமைச்சர் அவர்க ளின் அறிவிப்பை செயல் படுத்தும் விதமாக, 2023 2024 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறையின் திட்ட மதிப்பீட்டின் அடிப் படையில், ரூ.3,00,00,000/ (ரூபாய் மூன்று கோடி மட் டும்) மதிப்பீட்டில் நினைவு அரங்கம் அமைப்பதற்கு நிருவாக அனுமதி வழங்கி அரசாணை (நிலை) எண்.249 வெளியிடப்பட் டது.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நாச் சியாபுரம் உள்வட்டம், சிராவயல் கிராமத்தில் இதற்கென தேர்வு செய்யப் பட்ட 0.20.0 ஹெக்டேர் (சர்வே எண் 326/6) நிலத் தில் இந்த நினைவு அரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

### புதிய தொழிலாளர் நலச் சட்டத்தின் வாயிலாக

# தொழிலாளர் நலனும் பணியும் பாதுகாக்கப்படுமா?

## நாடாளுமன்றத்தில் – தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 17-

ஒன்றிய அரசின் புதிய தொழிலாளர் நல சட்டத் திருத்தங்களால் தொழிலா ளர் நலன் மற்றும் பணி பாதுகாப்பு கேள்விக்குறி யாகியுள்ளதாகவும் அதற்கு உடனடி தீர்வு காண அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? என் றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பின ரும் தி.மு.க. நாடாளுமன் றக் குழுத் துணைத் தலை வருமான தயாநிதிமாறன் ஒன்றிய தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சகத்துக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின் வருமாறு :

ஒன்றிய அரசின் தொழிலாளர் சட்டத் திருத்தங்கள் "தொழிலா ளர் நலனுக்கு விரோதமானவை" என தொழிற்சங்கங்கள் எதிர்ப் பதையும் பத்திரிகை ஊட கங்கள் அதுபற்றி சுட்டிக்காட்டு வதையும் ஒன்றிய அரசு அறிந்துள் ளதா? அவ்வாறு அறிந்தி ருந்தால் அதன் விவரங்கள் என்ன?

நான்கு புதிய சட்டத்தி ருத்தங்களை அறிவிப்ப தற்கு முன்னர் தொழிற்சங் கங்கள் மற்றும் தொழி லாளர் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட ஆலோச னைகளின் விவரங்கள் மற் றும் அவர்களின் முக்கிய கோரிக்கைகள் என்ன?

குறிப்பிட்ட சட்டத்தி ருத்தங்களின் அமலாக்கத் திற்கான கால அட்டவ ணையின் விவரங்கள், ஒப்புதல் அளித்த நடைமு றைக்கு வந்த தேதி விபரங் கள் என்ன? மாநில வாரி யாக தொழிலாளர் களுக்கான இடைக்கால பாதுகாப்புகள் மற்றும் சமூக பாதுகாப்பு விவரங் கள் என்ன?

100 முதல் 300 தொழி லாளர்கள் வரை உள்ள நிறுவனங்கள் அரசின் முன் அனுமதி இல்லாமல் பணி நீக்கம் மற்றும் ஆட் குறைப்பு செய்யலாம் என்ற விதியை ஒன்றிய அரசு எவ்வாறு நியாயப்படுத்துகிறது? தொழிலாளர்களின் வேலை பாதுகாப்பு மற் றும் வேலை உத்தரவாதம் மீதான அரசின் நோக்கம் என்ன?

பங்குசந்தை உள்ளிட்ட தளங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள், ஒப்பந்த மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள், குறிப் பாக ஜவுளி, கட்டுமானம் மற்றும் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MS MEs) போன்ற துறைகளில் உறுதியளிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம், தொழிலாளர் நல பாது காப்பு என்ன? அவர்களின் புகார்களுக்கு தீர்வு காண் பதை உறுதி செய்வதற் கான வழிமுறைகளின் விவரங்கள் என்ன?

என்று மக்களவையில் தயாநிதிமாறன் கேள்வி எழுப்பினார்.

### திருநெல்வேலி மேற்கு மாவட்டம்

# அம்பாசமுத்திரம் கிழக்கு, அம்பாசமுத்திரம் மேற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம் ஒன்றியம், **அம்பாச முத்திரம் கிழக்கு, அம்பாசமுத்திரம் மேற்கு** ஆகிய இரண்டு ஒன்றியங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப் பட்ட ஒன்றியங்களுக்கு, ஒன்றிய பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கபட்ட ஒன்றியங்கள் பின்வரும் ஊராட் சிகள் கொண்டதாகவும் அமையும்.

**அம்பாசமுத்திரம் கிழக்கு ஒன்றியம் :** 1. மன்னார்கோ வில், 2.அயன்திருவாலீஸ்வரம், 3.பிரம்மதேசம், 4.வாகை குளம், 5.ஜமீன்சிங்கம்பட்டி, 6.அயன்சிங்கம்பட்டி, 7.வைரா விகுளம், 8.தெற்குபாப்பான்குளம், 9.வெள்ளாங்குளி, 10.சாட்டுபத்து ஆகிய 10 ஊராட்சிகள்.

**அம்பாசமுத்திரம் மேற்கு ஒன்றியம் :** 1.அடைய கருங்குளம், 2.சிவந்திபுரம், 3.கோடாரங்குளம் ஆகிய 3 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **அம்பாசமுத்திரம் கிழக்கு, அம்பாசமுத்திரம் மேற்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப் பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**அம்பாசமுத்திரம் கிழக்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர் : இரா.சிவனுபாண்டியன் (எ) பரணி சேகர்,** 3/650, அகஸ்தியர்பட்டி, அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்

**அம்பாசமுத்திரம் மேற்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர் : பா.ஜெகன், பி.ஏ.,பி.எல்.,** 2/365, நடுத் தெரு, சிவந்திபுரம் ஊராட்சி, அம்பாசமுத்திரம், திருநெல் வேலி மாவட்டம் - 627 425.

**"அண்ணா அறிவாலயம்"** **துரைமுருகன்**
சென்னை - 18 பொதுச் செயலாளர்,
நாள்- 16.12.2025 தி.மு.க.

### திருப்பத்தூர் மாவட்டம்

# நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியச் செயலாளர் டி.சாமுடி அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக, தான் வகித்து வந்த பொறுப்பி லிருந்து விடுவித்துக் கொண்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக **ஆர்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி** (கெங்கையம்மன் கோயில் தெரு, ராமநாயக்கன் பேட்டை - அஞ்சல், வாணியம்பாடி தாலுக்கா, திருப் பத்தூர் மாவட்டம்) அவர்கள் நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியக்கழகப்பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 16.12.2025 தி.மு.க.

### 'முரசொலி' முன்னாள் மேலாளர் – ஆடுதுறை மு. உத்திராபதி மைத்துனர்

# ஜி.இளங்கோ முதலாம் ஆண்டு நினைவஞ்சலி!

சென்னை டிச.17-

'முரசொலி' அலுவலகத் தில் மேலாளராக பணி யாற்றிய ஜி. இளங்கோ அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று (17.12.2025) கடைப் பிடிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இதே நாளில் உடல் நலக் குறைவி னால் கீழ்ப்பாக்கம் மருத்து வமனையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பலனின்றி



மறைவு எய்திய ஜி. இளங்கோ முரசொலியில்

எழுத்தர், மேலாளராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவரது சகோதரியின் கண வர் -கழக இலக்கிய அணி துணை செயலாளர் வழக்க றிஞர் ஆடுதுறை உத்திரா பதி ஆவார்.

நாகப்பட்டினத்தில் உள்ள அவரது இல்லத்தில் கடைப்பிடிக்கப்படும் முத லாமாண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சியில் கழகத்தினர் ஏராளமானோர் அன்னா ரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய் கின்றனர்.

### சென்னை வடகிழக்கு மாவட்டம்

# புழல் ஒன்றியம்

## நாரவாரிக்குப்பம் பேரூர்க் கழக பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

**சென்னை வடகிழக்கு மாவட்டம், புழல் ஒன்றியம், நாரவாரிக்குப்பம் பேரூர்ச்** செயலாளர் ஜி.ராஜேந்திரன் அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக, தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக திரு. **ஆர்.டி.சுதாகர்,** எம்.ஏ., பி.எல்., 6, பனையாத்தம்மன் கோயில் தெரு, செங்குன்றம், சென்னை-600052) அவர்கள் **நாரவாரிக்குப்பம் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக** நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர் கழகத்தின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"** **துரைமுருகன்**
சென்னை - 18 பொதுச் செயலாளர்,
நாள்- 16.12.2025 தி.மு.க.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், கடல்மங்கலம் ஊராட்சிக்கு உட்பட்ட, கடல்மங்கலம் கிராமத்தில் வாக்குச்சாவடி பாக எண் 235 ல் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' சிறப்பு ஆலோசனைக் கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு உறுப்பினர் கெ.ஞானசேகரன் வாக்காளர் பட்டியல் திருத்தம் மற்றும் தேர்தல் தொடர்பான ஆலோசனைகளை வழங்கினார். இதில் கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்துகொண்டனர்.




திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் பாக எண் 132 புது கும்மிடிப்பூண்டி ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஆலோசனைபடி நடைபெற்றது இதில் ஒன்றிய கழக செயலாளர் கி.வேணுஆனந்த் பரப்புரை மேற்கொண்டு திமுக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் விளக்கி சிறப்புரையாற்றினார்.